# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



## நல்ல ராஜாக்கள், கெட்ட ராஜாக்கள்

எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Lazarus

தழுவியவர்: Ruth Klassen

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2014 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

மனாசேக்கு அது ஒரு துக்கமான நாளாயிற்று, அவனுடைய தந்தை, எசேக்கியா ராஜா சற்று முன்பதாக இறந்துபோனான். இப்போதோ, பன்னிரெண்டு வயதே ஆன, மனாசே யூதேயா தேவ ஜனங்களுக்கு புதிய ராஜாவானான். அவனுக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை. ஆனால் மனாசே 55 வருடங்கள் ராஜாவா யிருப்பான். நல்ல ராஜாவாயிருப்பதற்கு மனாசேக்கு தேவனுடைய உதவி தேவைப்பட்டது.



ஆனால் மனாசேயோ தேவனை
மறந்து, தீயக்காரியங்களை செய்தான்.
விக்கிரக வழிபாட்டிற்காக பலிபீடங்களை
புதுப்பித்தான். செதுக்கப்பட்ட விக்கிரகம்
ஒன்றை தேவனுடைய பரிசுத்த ஆலயத்தில்
வைத்தான். "நீ உனக்கு விக்கிரகத்தை உண்டு
பண்ணவேண்டாமென்றும்
அதை வணங்க
வேண்டாமென்றும்,"
தேவன்
மோசேயின்
மூலமாய்
சொல்லியிருந்தார்.



மனாசே மாந்திரீகம்
மற்றும் மந்திரவித்தைகள்
பழக்கமுடையவனாயிருந்தான்.
அவன் ஜனங்களை தேவனை
விட்டு தூரமாய் நடத்தினான்.
தன்னுடைய குமாரரை கூட
விக்கிரகங்களுக்கு
பலியாக கொடுத்தான்.
மனாசேயின்
கீழ்ப்படியாமை
தேவனை அதிகமாக
கோபப்படுத்தியது.



தேவனுடைய ஜனங்கள் கீழ்ப்படியாமல் இருக்கும்போது, அவர்கள் தண்டிக்கப்பட அனுமதிக்கிறார். அதுதான் மனாசேயிக்கும், அவன் ஆட்சிசெய்த ஜனங்களுக்கும் நடைபெற்றது. தேவன் அசீரிய படையை அவர்கள் மேல் கொண்டுவந்தார். மனாசே விலங்கிடப்பட்டு பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்பட்டான்.





பாபிலோனில்
கஷ்டங்களின் மத்தியில்,
அவன் தேவனாகிய
ஆண்டவரை நோக்கி
கூப்பிட்டான்.
தன்னுடைய
முன்னோர்களின்
தேவனிடம் தன்னை
தாழ்த்தி வேண்டுதல்
பண்ணினான்.



அவன் மறுபடியுமாக
விக்கிரகங்களிடத்தில்
வேண்டுதல்
செய்யவில்லை!
ஆனால் மனாசேயின்
துஷ்டகரமான
செயல்களுக்கு
பின்னர் அவனுடைய
வேண்டுதலை கேட்டு
பதிலளிப்பாரோ?

ஆமாம்! ராஜாவின் ஜெபத்தை
தேவன் கேட்டு மறுபடியுமாக
எருசலேமுக்கு கொண்டுவந்து,
திரும்பவும் சிங்காசனத்தில்
அமர்த்தி, அவனை ஜனங்கள்
மேல் ராஜாவாக ஏற்படுத்தினார்.
அப்பொழுது மனாசேக்கு கர்த்தரே
ஆண்டவர் என்று தெரிந்தது.



மனாசே ராஜா ஒரு புதிய மனிதனானான்.
தேவனுடைய ஆலயத்திலிருந்து விக்கிரகங்களை
எடுத்துபோட்டதுமல்லாமல், எருசலேமிலிருந்த
எல்லா அந்நிய தேவர்களையும் ஒன்று சேர்த்தான்.
அவைகளை எல்லாம் தூர எறிந்துவிட்டான்.
தேவனுடைய ஆலயப்பிரகாரத்தை செப்பனிட்டு அதிலே
நன்றி பலிகளை செலுத்தினான்.



பின்பு அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை சேவிக்கும்படி சகல ஜனங்களுக்கும் கட்டளையிட்டான். மனாசேயின் வாழ்க்கையில் எவ்வளவு பெரிய மாற்றம்!



மனாசே மரித்தபின்பு, அவனுடைய சொந்த குமாரனாகிய ஆமோன், விக்கிரகாராதனைக்கு திரும்பச் சென்றான். மனாசேயைப் போல அவன் தேவனுக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தவில்லை.  ஆமோன் அதிகமான பாவங்களை செய்ய செய்ய, அவனுடைய ஊழியக்காரர்கள் கடைசியாக அவனுடைய வீட்டிலே அவனைக் கொன்றுபோட்டார்கள். அவன் இரண்டு வருடம் மாத்திரம் ஆட்சிசெய்தான்.



அடுத்த ராஜா, யோசியா, எட்டே வயதுடையவனாயிருந்தான். அவன் 31 வருடம் ஆட்சி செய்து மற்றும் தேவனுடைய பார்வையில் சரியான காரியங்களை செய்தான். அவன் தவறான வழிபாடுகளையும், அந்நிய தேவர்களையும் அழித்துப்போட்டான். உண்மையிலேயே, யோசியா எல்லா விக்கிரகங்களையும் பொடியாக்கினான்.



நல்ல ராஜாவாகியா
யோசியா தேவனுடைய
ஆலயத்தை பழுது பார்த்து,
சுத்தம் பண்ணினான். அங்கே
குப்பைகள் மத்தியில் மோசேயின்
நியாயப்பிரமாண புஸ்தகத்தை
ஆசாரியன் ஒருவன்
கண்டுபிடித்தான்.





நியாயப்பிரமானத்தின்
வார்த்தைகளை கேட்டபோது,
ராஜா தன்னுடைய வஸ்திரங்களை
கிழித்து, துக்கப்பட்டான்.
தன்னுடைய முன்னோர்கள்
தேவனுடைய சட்டத்திற்கு
கீழ்ப்படியாமல் எவ்வளவு
கொடூரமான துன்மார்க்கராய்
இருந்திருக்கிறார்களென்று
யோசியா
அறிந்துகொண்டான்.

உல்தாள் என்னும் பேர் கொண்ட தீர்க்கதரிசியானவள் யோசியாவுக்கு தேவனுடைய செய்தியை கொடுத்தாள். "கர்த்தர் கூறுகிறார், 'இதோ இந்த புத்தகத்திலுள்ள எல்லா சாபங்களையும் இந்த இடத்திற்கு கொண்டுவருவேன் ஏனெனில் அவர்கள் என்னை கைவிட்டுவிட்டார்கள்.'" ஆனாலும் யோசியா தன்னைத்தாழ்த்தி கீழ்ப்படிந்ததினாலே அவன்



மரணமடையும் நாட்கள் வரைக்கும் அது நடப்பதில்லை என்றாள்.

தன்னுடைய ஜனங்களை திரும்பவும் ஆண்டவரிடத்தில் கொண்டுவர தேவன் யோசியாவுக்கு உதவி செய்தார். ஒரு நாள் தன்னுடைய படையை யுத்தத்திற்கு நடத்திசெல்லும் போது, எதிரியின் அம்பினால் யோசியா மிகவும் காயப்பட்டான். அவனுடைய வேலைக்காரர்கள் அவனை ரதத்தில் ஏற்றி அவனை எருசலேமுக்கு கொண்டு வந்தார்கள். அங்கே அவன் இறந்துபோனான். எல்லா மக்களும் துயரத்துடன், தங்களுடைய நல்ல ராஜாவுக்காக ஒரு பாட்டை எழுதினார்கள்.





சில நாட்களுக்குப்பின், ராஜ்ஜியம் முடிவுக்கு வந்தது.  ஆனால் ஒரு நாள், இஸ்ரவேல் மேல் ஒரு ராஜா ஆட்சி செய்வார். அவருடைய பெயர் ராஜாதி ராஜாவும் மற்றும் பிரபுக்களுக்கெல்லாம் பிரபு.  இயேசு கிறிஸ்து முதன் முறையாக வந்தபோது, அவர் புறக்கணிக்கப்பட்டார் மற்றும் சிலுவையில் அறையப்பட்டார்.





இயேசு கிறிஸ்து
மீண்டுமாக வரும்போது,
அவர் இஸ்ரவேல் மேல்
மாத்திரம் ராஜாவாக
இராமல், பூலோகத்தின்
மேல் எங்கும்
ராஜாவாயிருப்பார்.

நல்ல ராஜாக்கள், கெட்ட ராஜாக்கள்

# தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

2 நாளாகமம் 33-36

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16